சி எஸ் ஐ கர்நாடக மத்திய பேராயம்

சுற்றுசூழல் ஞாயிறு -வழிபாட்டு முறை

கடவுளின் படைப்பை பேணி வளர்ப்பது

ஜூன் 2019

ஜெபம்

எங்களை படைத்த தேவனே, உமது உன்னத படைப்புகள் அனைத்தையும் நல்லது என்று கண்டீர்.

எங்கள் இறைவனாகிய தேவனே, எல்லாவற்றையும் உமக்கு உகந்த வண்ணமாய் வளர உதவுகிறீர்

எங்கள் மீட்பராகிய தேவனே, நம்பிக்கையையும், விசுவாசத்தையும் அதிசயப்பட தக்கதாய் நிறுவிட செயலாற்றுகிறீர்

சதாகாலங்களிலும் வழிநடத்துகின்ற தேவனே, உம்மை ஆவியோடும் உண்மையோடும், இடைவிடாது தொழுதுகொள்ள உதவியருளும்.

ஆரம்ப பாமாலை/கீர்த்தனை

ஆராதனை அழைப்பு

திரியேக தேவனின் நாமத்திலே, ஆராதனையை தொடங்கும் இந்த வேளையில், நாம் கர்த்தருக்காய் காத்து நிலைத்திருக்க கற்றுக்கொள்ளுவோம். ஏனெனில் கர்த்தர் நம் மத்தியில் வாசம் செய்கிறார், நம் தேவனாகிய கர்த்தர் நம் மத்தியில் நீதியையும், சமாதானத்தையும், நிலைநிறுத்துகிறார். அவர் தம் எல்லா படைப்புகளிலும், எழிலையும் அமைதியையும் ஒன்றினைத்துள்ளார். ஆமென்

தேவன் தொகுத்தருளிய திருச்சட்டங்களும், இறைவாக்குகளும்

நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே, நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் அன்புகூருவாயாக. உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல, தேவ சாயலாகவும் தேவனுடைய செய்கையாயிருக்கிற பிறனிடத்திலும் அன்புகூருவாயாக

மறுமொழி முறைமையாக வாசிக்க - பத்து கட்டளைகள்

உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.

மறுமொழி: *நீரே எங்களை படைத்த தேவன்; நீர் படைத்தவைகளை வணங்காதிருக்க எங்களுக்கு உதவியருளும்*

யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்;
மறுமொழி: தேவனே நாங்கள் உம்மை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுகிறோம்; உமக்கு மாற்றாக ஒன்றையும் கொள்ளாதபடிக்கு எங்களுக்கு உதவியருளும்

உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக
மறுமொழி: எல்லா வளங்களுக்கும் ஆதாரமான தேவனே, இயற்கையின் கொடையை தக்க வைத்துக்கொள்ள எங்களுக்கு உதவும்.

ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக
மறுமொழி: தேவனே நீர் ஓய்வு நாளில் ஓய்ந்திருந்து அதை பரிசுத்தமாக்கினீர்; விதைப்பின் ஓய்வு வருடத்தை நினைவுகூர எங்களுக்கு உதவியருளும்.

உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.
மறுமொழி: எம் முன்னோர்களின் தேவனே, எங்கள் தாய் நிலத்தை மதித்திட எங்களுக்கு உதவியருளும்.

கொலை செய்யாதிருப்பாயாக.
மறுமொழி: ஜீவனுள்ள தேவனே, எல்லா உயிரினங்களிடத்திலும் மதிப்பைக் காட்ட எங்களுக்கு. உதவியருளும்.

விபசாரம் செய்யாதிருப்பாயாக.
மறுமொழி: தேவனே நீர் உண்மையுள்ளவர், நாங்கள் எங்கள் பொறுப்பிலே கவனமுள்ளவர்களாக இருக்க உதவியருளும்

களவு செய்யாதிருப்பாயாக.
மறுமொழி: தேவனே நீர் நீதிபரர், எங்கள் சுயலாபத்திற்காய் பூமியின் வளங்களை நாங்கள் கொள்ளையிடாமல் இருக்க உதவியருளும்

பிறனுக்கு விரோதமாகப் பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக.
மறுமொழி: தேவனே நீர் எங்கள் எஜமானர், உடன்-படைப்பாளி என்கிற எங்கள் அழைப்பிற்கு உகந்தவர்களாய் இருக்க உதவியருளும்.

பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக

மறுமொழி: தேவனே நீர் நியாயாதிபதி, உமக்கு சொந்தமானவைகளை நாங்கள் உரிமை பாராட்டாதபடிக்கு வழிநடத்தும். ஆமென்.

துதி மற்றும் நன்றி கூறுதலின் ஜெபம்

ஆராதனையை வழிநடத்துபவர்: வானத்தை படைத்த எங்கள் அன்பு தேவனே, உமது படைப்பாற்றல்மிக்க மனதின் பறந்த தன்மையும், அற்புத செயல்களின் செயலாக்கமும் அளவிடமுடியாதவைகள்.

திருச்சபை: கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு மகத்துவமானவைகள்! உமது யோசனைகள் மகா ஆழமானவைகள்.

வழிநடத்துபவர்: பூமியை படைத்த எங்கள் அன்பு தேவனே, உமது சிந்தைமிகு வடிவமைப்பின் பன்முகத்தன்மையும், உமது படைப்பின் சீர்மிகு சமநிலையும் அற்புதமானவைகள்.

திருச்சபை: கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு மகத்துவமானவைகள்! உமது யோசனைகள் மகா ஆழமானவைகள்.

வழிநடத்துபவர்: எங்களை படைத்த அன்பு தேவனே, உமது படைப்பில் கண்கூடாக புலப்படும் உமது மகிமையையும், மாட்சிமையையும் மீட்பின் கிருபையின் அடையாளம், வெளிப்படுத்துகின்றன

திருச்சபை: கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு மகத்துவமானவைகள்! உமது யோசனைகள் மகா ஆழமானவைகள்.

பாவ அறிக்கை அழைப்பு

வழிநடத்துபவர்: நீதியுள்ள சமாதானத்தின் தேவனே, நீர் எங்களை காரியதரிசிகளாக அழைத்திருக்க, நாங்களோ உமது அனைத்து படைப்புகளின் பயனாளிகளாக இருக்கிறோம். உம்முடைய படைப்புகளைக்குறித்த பொறுப்புணர்வை எங்கள் கருத்தில் கொள்ள, இரக்கத்தையும் கிருபையையும் எங்களுக்கு அருளும். எங்கள் கவனக்குறைவான சுயநலமிக்க வேலைகளைக் குறித்து உமது மன்னிப்பை வேண்டி; நாங்கள் ஜெபிக்கிறோம் கர்த்தாவே.

சிறுபிள்ளை: கர்த்தாவே நான் என் அறியாமையினாலும், பொறுப்பற்றத்தன்மையினாலும், உமது படைப்புகளை நான் கவனித்துக்கொள்ளவில்லை. நான் இலைகளையும், பூக்களையும் பார்க்கும்போது அவைகளை பறிக்கவும், அழிக்கவும் சோதிக்கப்பட்டேன். கர்த்தாவே என்னை மன்னியும்.

வாலிபர்: *கர்த்தாவே, என் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் அவசரத்திலும், மும்முரத்திலும், உமது படைப்பை நேசிக்கவில்லை. நான் என் குறிக்கோள்களை அடையும் ஆர்வத்தில் உமது படைப்பை லாபமாகவும் ஆதாயமாகவும் பார்க்கின்றேன். கர்த்தாவே என்னை மன்னியும் .*

பெரியவர்கள்: *கர்த்தாவே, வீட்டிலும், வேலையிலும் எனது பொறுப்புகளை, சமநிலையில் சமாளிக்க வேண்டிய என் அழுத்தம் நிறைந்த வாழ்க்கையில், உமது படைப்பின் மாண்பை வியந்து பாராட்டுவதை நிறுத்திவிட்டேன். போட்டிகளினால் மிகவும் திசைதிருப்பப்பட்டபடியால் உமது படைப்பின் நற்குணத்தை நான் காண தவறிவிட்டேன். கர்த்தாவே என்னை மன்னியும்*

மூப்பர்: *கர்த்தாவே, நான் உமது படைப்புகளை ரசித்து வியந்து பாராட்ட எனக்கு நேரம் இருந்த போதிலும் என்னுடைய உலகப்பிரகாரமான பொறுப்புகளில் அழைக்கப்பட்டு மகனாக/மகளாக, தாயாக/தந்தையாக சகோதரனாக/சகோதரியாக, தாத்தாவாக/பாட்டியாக, நண்பனாக/தோழியாக மற்றும் புருஷனாக/மனைவியாக எனது வரையறைக்குள் எல்லா கடமைகளுக்கும் இடம்கொடுத்துள்ளேன். ஆனால் உமக்கு உண்மையுள்ள உமது உக்கிராணக்காரனாக உமது படைப்புக்கு நேரம் கொடுக்க முடியவில்லை. கர்த்தாவே என்னை மன்னியும்.*

ஆறுதல் வார்த்தை: *கர்த்தர் சொல்லுகிற வார்த்தை இதுவே: நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன். அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.* எரேமியா 29:11

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான் 3:16

நம்பிக்கையினால், சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும். ரோமர் 8: 20

பாவநிவாரண ஜெபம்

தேவன் நமக்கு கொடுத்த தேசத்திலே சாமாதானத்தையும் செழிப்பையும், கண்டடைவோமாக.

தேசத்திற்காய், கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்வோம், ஏனென்றால் தேசம் செழித்தால் நாமும் செழிப்போம். ஆமென்.

இந்நாளின் பிரார்த்தனை

சர்வவல்ல தேவனே, உமது படைப்பின் செழுமையிலே களிகூருகிறோம். உமது படைப்பிலே, உமது மகிமையையும், உமது வருகையையும், எங்களோடிருக்கும் உமது நிலையான பிரசனத்தின் அடையாளத்தையும் பார்க்கிறோம். நீர் எங்களுக்கு கொடுத்த அனைத்தையும் உமது மகிமைக்காக உபயோகிக்கும்படி, உமது படைப்புகளை போஷித்துவளர்க்க எங்களுக்கு உதவியருளும். நீர் படைத்த இந்த உலகத்தின் சகல அதிகாரத்தையும் கீழ்ப்படுத்திருக்கிற, உம்மோடும், பரிசுத்த ஆவியோடும் முடிவில்லாமல் ஜீவித்து அரசாளுகிற ஒரே தேவனாகிய எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்

வேத வாசிப்பு
ஆதியாகமம் 1: 28 – 31
சங்கீதம் 104: 1 – 23
வெளிப்படுத்தல் 22: 1 – 5
பரிசுத்த லூக்கா 1: 22 – 31

பாடல்/நாடகம்

பிரசங்கம்

விசுவாச பிரமாண அறிக்கை

மன்றாட்டு ஜெபம்
எங்களுக்காக பரிந்துபேசுகிற கர்த்தராகிய இயேசுவே, வாழ்வின் கூறுகளாகிய காற்று, நெருப்பு, தண்ணீர், நிலம், விண்வெளி இவைகளுக்காக இவைகளோடு இணைந்து மன்றாட எங்கள் குரல்களை ஒன்றுபடுத்தும்.

குரல் 1: காற்று: கர்த்தாவே நான் உமது படைப்பு. நான் ஜீவனுள்ள விதைகளை அவற்றின் வளர்ச்சிக்காக சுமந்து செல்கிறேன். ஆயினும் நான் அழிவைக் கொண்டு வருகிற கிழக்குக் காற்றாக நினைக்கப்படுகிறேன்
மறுமொழி: நீர் என்னை படைத்த நோக்கத்தை நான் அறிந்திருக்கிறது போல மற்றவர்களும் என்னை புரிந்துகொள்ள உதவியருளும்

குரல் 2: நெருப்பு: கர்த்தாவே நான் உமது பரிசுத்த ஆவியை குறிக்கிறேன். மேலும் உம்மிடமிருந்து வந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உதவியாளன் நான். ஆயினும் நான் நரகத்திலே பற்றியெரிகிற நெருப்போடு சம்மந்தப்படுத்தப்பட்டிருக்கிறேன்.
மறுமொழி: நீர் என்னை படைத்த நோக்கத்தை நான் அறிந்திருக்கிறது போல மற்றவர்களும் என்னை புரிந்துகொள்ள உதவியருளும்

குரல் 3: தண்ணீர்: *கர்த்தாவே, வாழ்வாதாரத்தின் ஊற்றாக நான் இருக்கின்றேன், ஆயினும் சண்டைக்கும், சச்சரவிற்கும் நான் காரணமாகிவிட்டேன்.*

மறுமொழி: *நீர் என்னை படைத்த நோக்கத்தை நான் அறிந்திருக்கிறது போல மற்றவர்களும் என்னை புரிந்துகொள்ள உதவியருளும்*

குரல் 4: நிலம்: *கர்த்தாவே, நான் உயிர்களை தாய் அன்போடு நேசித்து, நீர் படைத்த எல்லாவற்றையும் தாங்கிவருகிறேன். ஆயினும் இப்போது நான் ஆசிர்வாதமல்ல வெறும் ஒரு சொத்து.*
மறுமொழி: *நீர் என்னை படைத்த நோக்கத்தை நான் அறிந்திருக்கிறது போல மற்றவர்களும் என்னை புரிந்துகொள்ள உதவியருளும்*

குரல் 5: விண்வெளி: *கர்த்தாவே, நான் உமது பரந்த வெற்றிடத்தை தாங்குகிறேன். ஆனாலும் ஆகாய விரிவிலும் எல்லை பிரச்சனைகள் எழும்புகின்றன.*
மறுமொழி: *நீர் என்னை படைத்த நோக்கத்தை நான் அறிந்திருக்கிறது போல மற்றவர்களும் என்னை புரிந்துகொள்ள உதவியருளும்*

ஆசீர்வாதம்
திரியேக தேவனுடைய நாமத்தினால் நீங்கள் இணைந்திருக்கிறது போல, வாழ்வின் ஆதாரமும், வாழ்வின் பெலனுமான சர்வவல்லமையுடைய தேவனின் ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக. ஆமென்

அப்பம் பிட்குதல்